மாகாணக் கல்வி திணைக்களம் சபரகமுவ – வார பாடசாலை

செல்வி செல்லையா சிவநந்தனி

ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

தரம் - 13

வாரம் 4

பாடம் - கர்நாடக சங்கீதம்

# 72 மேளகர்த்தா அமைப்பு

1. 72 மேளகர்த்தா சக்கரத்தை அறிமுகப்படுத்தியவர் யார்? அவர் இயற்றிய நூல், வாழ்ந்த காலம் என்பவற்றைக் குறிப்பிடுக.
2. துளஜா மகாராஜாவினால் எழுதப்பட்ட நூல் எது? அவர் வாழ்ந்த காலம் யாது?
3. சங்கீரக சூடாமணி எனும் நூலின் ஆசிரியர் யார்? அவர் வாழ்ந்த காலத்தினைத் தருக.
4. சங்கீரக சூடாமணி நூலின் சிறப்பினைத் தருக.
5. 72 மேளகர்த்தா சக்கரமானது எத்தனை சம பாகங்களாக வகுக்கப்பட்டுள்ளது?
6. அதன் முதலாம், இரண்டாம் பாகத்தினை வேறு எப்பெயரால் அழைப்பர்?
7. மத்யமத்தை(ம) அடிப்படையாகக் கொண்டு மேளகர்த்தாக்கள் பிரிக்கப்பட்டுள்ள முறையைத் தருக.
8. 72 மேளகர்த்தாக்கள் அமைந்துள்ள 12 சக்கரங்களையும், அதன் மேள இராக இலக்கங்களையும் முறையே தருக.
9. இராகத்திற்கு இராகம் மாறுபடும் ஸ்வரங்கள் எவை?
10. சக்கரத்திற்கு சக்கரம் மாறுபடும் ஸ்வரங்கள் எவை?
11. விவாதி மேளங்கள் என்றால் என்ன?
12. விவாதி ஸ்வரங்கள் எத்தனை? அவற்றினைக் குறிப்பிடுக.
13. 72 மேளகர்த்தா சக்கரத்தில் விவாதி ஸ்வரங்கள் அமைந்துள்ள விதத்தினைத் தருக.
14. விவாதி தோஷத்திற்கு உட்பட்ட மேளங்களின் இலக்கங்களைத் தருக
15. விவாதி மேளங்கள் எத்தனை?
16. விவாதி தோஷமற்ற மேளங்கள் எத்தனை?
17. 16 ஸ்வரப் பெயர்களுள் பேதமடையும் ஸ்வரங்கள் எவை? அவற்றின் பெயர்களையும், சங்கேதாட்சரங்களையும் குறிப்பிடுக.
18. ஒவ்வொரு சக்கரத்திலுள்ள மேளங்களினதும் சங்கேதாட்சரங்களைத் தருக.